ஓலை 31 | ஓசை 122 | ஜனவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முகமும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence there is none equal to that of being free from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# நீயா? நானா?

எத்தனை முறைகள் என்னைத் தழுவினாலும்?
அத்தனை முறையும்  ஆள்வேன் உன்னை
கண்ணீர் சிந்தி கரைந்திட மாட்டேன்
கண்டிடு நீயும் காலம் கழிய

நீயா நானா நிலைப்பதைப் பார்ப்போம்
தீயா நீரா தீண்டிடத் தெரியும்
ஓயா தோட்டம் உயிருள்ள வரையில்
தேயா நிலவாய் திமிராய் நிற்பேன்

அடிகளை எல்லாம் அணைத்தே நானும்
படிகளாய் மாற்றி பாரில் வெல்வேன்
இடிகளைக் கூட இதமாய் ஏந்தி
படிப்பினை யாக்கி பாடம் கற்பேன்



அச்சம் எதற்கு? அறிவதும் இருக்க
எச்சம் என்றே எண்ணுவோர் நடுவில்
உச்சம் தொடுவேன் உழைப்பின் வழியே
மிச்சம் இன்றி மீட்டுவேன் நானும்

தோல்வியே உன்னிடம் தோற்க மாட்டேன்
கால்கள் பதித்தே கலையாய் நிற்பேன்
வேல்போல் பாய்ந்தே வெற்றியை சூட்டுவேன்
தோல்வியே என்னிடம் தோற்பது நிச்சயம்

இடைவிடா முயற்சியே இலக்கினை நெருங்கிடும்
தடைகளை உடைக்கையில் தனி வழி தோன்றிடும்
அடங்க மறுத்தே ஆளியாய் வாழ்வேன்
விடியலைத் திறப்பேன் விதிகளை மாற்றியே


*ஆளி- சிங்கம்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# அதிகாலை சுபவேளை!

வைகறை துயில் எழுவெனும் கட்டளையை
அவ்வை இட்டனள் ஆத்திச்சூடி வழியாக!
இயற்கையோடு மனிதன் இயைந்து வாழ்கையிலே
அயர்ந்து உறங்கினான் அன்றாடம் இரவினிலே!
இயந்திர வாழ்வினிலே இழக்கிறான் உறக்கத்தை!
பயனாகக் கிடைப்பதோ பல்வேறு வியாதிகளே!
தூய்மையான உயிர்வளி மிகுந்திருக்கும் அதிகாலையிலே
துயிலெழப் பழகிடுவோர் துய்த்திடுவர் நற்பலனை!
காற்று ஒலிமாசு குறைந்திருக்கும் அவ்வேளை
உடற்பயிற்சி செய்வோர்க்கு உடல்நலன் மேம்படுமே!
உடல்நலன் நன்கமைந்தால் மனநலனும் மேம்படுமே!
வாத பித்த கபம் மூன்றும் சமநிலையில் இருந்திடுமே!
புத்தியும் சிந்தனையும் தெளிவாகும் அதிகாலை!
தெளிவான மனநிலையில் திட்டமிடல் எளிதாகும்!
"வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுதெழுதல் என்பதே
முந்தையர் கண்ட முறை"யென்றது ஆசாரக்கோவை!
வாழ்வில் வெற்றிபெற்ற மனிதரெலாம் அதிகாலை
எழுவதை வழக்கமாய்க் கொண்டிருந்ததை அறிந்திடலாம்!
அதிகாலை வேளையில் ஆழ்மனத்தின் வேண்டுதலை
அண்டத்தின் சக்திகள் நிறைவேற்றும் என்றுரைப்பர்
ஞானிகளும்! தூக்கம் கெடுவதனால் நம்முடலில்
உண்டாகும் சோர்வுநிலை! உருவாகும் நோய்கள்பல!
மன அழுத்தம், காலநிலை, முதுமை, பயமிவற்றால்
உறக்கத்தைத் தொலைக்கின்றோம்! ஒலி, ஒளி அதிகமிலா
அறைகளில் உறங்குவதால் ஆழ்ந்த உறக்கம்
அளித்திடுமே அடுத்த நாளில் புத்துணர்வை!
கைப்பேசி பயன்பாட்டைக் குறைத்திடுவோம் இரவுகளில்!
அதிகாலை சுபவேளை ஆகிடுமே எல்லோர்க்கும்!





கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# பாதை மாறிய பயணங்கள்!

நினைப்பவை யாவும்
நடப்பதில்லை வாழ்வில்.
நடப்பவை யாவும்
நல்லதற்கே என்றால்
மனதினில் தங்கிடும்
எந்நாளும் அமைதி.



படித்ததும் பணி சென்றிட
ஆசை எனக்கு.
கடிமணத்தால் இல்லத்து
அரசியாய்ப் பதவியேற்பு.
கொண்ட கொழுநனனோ
மக்களைக் காத்திடென்றார்.
படித்த படிப்பறிவை
வீணாக்க மனதில்லை.

நேரத்தை வீணே
போக்கிடவும் விருப்பில்லை.
கணவனோ வழக்குரைஞர்.
கடவுளிடத்து சென்றார்
வழக்காட, இளமையிலேயே
வாழ்க்கைப்பயணம் தொடர்ந்திட
பணிக்குச் செல்லவேண்டிய
நிலையில் நான்.

பிள்ளைக்களுக்காய்த் தேர்ந்தெடுத்தேன்
ஆசிரியைப்பணி.
தனியார்ப் பள்ளியொன்றில்
கிடைத்தது ஆசிரியைப்பணி.
பணியில் கிடைத்த ஊதியமே
பசிப்பிணியைப் போக்கியது.

தன்னம்பிக்கையோடு எளிமையாய்
வாழ்ந்திடப் பழகினோம்.
பொறுப்புணர்ந்து என் குழந்தைகள்
படித்தார்கள், நன்றாய்.
வங்கிக்கடனில் மேல்படிப்பு
படித்ததும் கிடைத்தது பணி.
பணியில் ஈட்டிய ஊதியத்தால்
கடனடைந்தது.

இல்லத்தரசியாய் இருந்த நான்
பாதை மாறினேன்.
காலத்தின் கட்டாயம் என்
பயண மாற்றம்.
வாழ்க்கை மேம்பட
உதவியது சிறப்பாய் ,எனக்கு!

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# மகான் காந்தி மகான்



மனிதன் தானே நீயும்
மகான் என்பதும் ஏனோ
ஹரிச்சந்திரா என்ற நாடகம்
பார்த்தும் பொய் சொல்ல
மறுத்ததால் நீயும் மகானோ!

புலால் உணவை தவிர்த்தாய்
மது அருந்த மறுத்தாய்
இப்படியே லண்டனில் படித்தாய்
பாரிஸ்டர் பட்டம் பெற்று
வழக்கறிஞர் தொழில் செய்தாய்

கருப்பு உன்வண்ணம் என்றே
புகைவண்டியில் இருந்து தள்ளிவிட்டு
தென் ஆப்ரிக்காவில் விழுந்தாய்
அஹிம்சை எனும் ஆயுதத்தின்
துணையோடு எழுந்து நின்றாய்

தாய்நாட்டின் அடிமை சங்கிலி
அறுக்க அஹிம்சையாகம் நடத்தி
அடிவாங்க அனைவரையும் அழைத்து
அடிவாங்குவதே வீரம் என்று
விடுதலைக்கு வித்திட்டாய் அன்று.

இடைக்கு மேலே உடையைவிடுத்து
அவமானத்தை மேலாடையாய் உடுத்தி
அன்னை தேசத்திற்கு சுதந்திரம்
எனும் ஆடையை நெய்ந்தெடுக்க
இராட்டையை கையில் எடுத்தாய்

ஒத்துழைக்க நீ மறுத்தாய்
வரி கட்டாமல் தடுத்தாய்
சுதந்திர காற்றை சுவாசித்தாய்
இரண்டு குண்டு மார்பில்தாங்கி
ஹே ராம் என்றே மகான் ஆனாய்

கவிஞர் செல்விமணாளன்

# இச்சை

அகிலத்தில் இச்சைக் கொள்ள
ஆயிரமாயிரம் உண்டு!
அடுத்தவர் பொருளை அடைய
ஆலாய் பறக்கும் மனிதனை
தவறாய் வழி நடத்தும்
தலைக்குனிவை ஏற்படுத்தும்!
கண் மறைக்கும் காம இச்சை
சாக்கடையில் தள்ளி விடும்!
இவ்வுலகில் இச்சை கொள்ள
இறைவனைத் தவிர யாருமில்லை!
ஆசையே துன்பத்திற்கு காரணம்
அறிந்துணர்ந்து சொன்ன புத்தன்!
அவன் வழி நடந்திட்டால்
பேரின்பம் பெற்றிடலாம்
பெருவாழ்வு வாழ்ந்திடலாம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை 73

# புகழ்

**அதிகாரம் : 24**




உலகோர் உன்னை
மேன்மையாய் பேசுதலும்.
உன்பெயரை ஒவ்வொருநாவும்
உரைத்தலுமே புகழாம்.

புகழோடு வாழ
வறியவர்க்கு ஈகைசெய்.
உயிர்க்கு ஊதியமாம்
புகழை சேமித்துவை.

இரப்பவர்க்கு பொருள்கொடுத்து
உதவுபவர் தலைமேல்.
நிற்கின்ற புகழே
எப்பொழுதும் நிலைக்கும்.

உயர்ந்த புகழொன்றே
உலகில் ஒப்பற்றது.
அழிவில்லாது நிலைக்கவல்லது
புகழன்றி வேறொன்றில்லை.

நெடுங்காலம் நிற்கவல்ல
புகழ்தரும் செய்கையால்.
வானுலகம் தேவரைவிடுத்து
அப்புகழாளனைப் போற்றும்.

புகழால் மேன்மைபெறும்
கேடும் சாவும்.
அறிவில் சிறந்தோர்க்கல்லாமல்
அடுத்த பிறர்க்கில்லை.

புகழென்னும் சிறப்போடு
தோன்றிடல் வேண்டும்.
இல்லையேல் உலகினர்முன்
தோன்றாதிருத்தலே நலம்.

புகழ் உண்டாகுமாறு
வாழ இயலவிலையெனில்.
நம்மையே நொந்துகொண்டு
எஞ்சியபுகழையாவது பெறுவோம்.

புகழில்லாரின் உடலை
தாங்கும் நிலம்கூட.
வளமான பயன்தருதலில்
குறைபாடு கொள்ளும்.

பழியின்றி வாழ்தலே
நல்வாழ்க்கை நெறியாம்.
புகழின்றி வாழ்தல்
உயிரிருந்தும் செத்ததற்கொப்பாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# சிறுதானியம்*

சிறுதானிய ஆண்டாம்
சிரிக்கிறது இவ்வாண்டு
அமோகமாக விளைந்தும்
அடுத்த நாட்டுக்காரர்
அதிசயத்து கொண்டாட
அறிவில் எட்டிடும் நமக்கு
அக்காலத்தே வாழ்ந்தவர்
அனைவரும் உண்டிட
ஆரோக்கியம் காத்திட
அவமரியாதை செய்து
அந்நிய கலாச்சாரத்தில் மூழ்க
அடுக்கடுக்காய் நோய்கள்
ஆமை வயது வாழ்ந்திட
ஆகாரமாயிருந்தது சாமை
கொள்ளை நோய்கள்
கொண்டு போயிடின்
கண்டுவாழ்ந்தனர்
கொள்ளுப்பேரனின்
கல்யாணத்தையும்.
கம்பங்கூழ் குடித்தவர்
கம்பூன்றி நடக்கவில்லை
கேப்பையின் கால்சியத்தால்
கால்வலியும் கண்டதில்லை
கருத்தில் பதியாமல்
கவனிக்க மறந்ததால்
குப்பைகளைத் தின்று
சருகாய் உதிர்கின்றோம்
அந்நிய கலாச்சாரத்தின்
ஆசையில் வாழ்போரே
அறிவித்துவிட்டானவன்
ஆரோக்கியமானது சிறுதானியமென
இனியேனும் உண்ணுவீரே.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்


# மீனவன்*

பாதையில்லா ஊருக்கு
பனிப்பொழியும் காலையிலே
படகு தள்ளிப் புறப்பட்டான்
பார்த்துப்போய்வா என்றவளின் கணவன்

மீனுக்குப் பாய்விரித்து
காவலுக்கு அவன் இருந்தான்
காற்றுப்பாடல் அவன் கேட்டான்
நிலவின்காட்சி அவன் ரசித்தான்



ஊர்விட்டு வெகுதூரம்
ஆள் இல்லா ஊருக்கு
படகேறி வந்துவிட்டான்
புதையல் அதை அள்ளிச்செல்ல



மீனுக்கு தூண்டில் போட்டு
படகு அது மிதக்கும்
வீட்டுக்கு தூண்டில் போட்டு
அவன் மனமும் மிதக்கும்

நள்ளிரவு நண்பகலாகும்
நாட்களும் தண்ணீரிலே
தோன்றி மறையும்

ஊர்வந்து சேரும்வரை
தரைபடாது இவன் கால்கள்
மீனோடு இவன் வந்தால்
வறுமை தொடாது இவன் வீடு

கவிஞர் ஹஸன்எம்பஜீத்,இலங்கை

# கண்ணெதிரே தோன்றினாள்

காதலின் தீபம்
காப்பாற்றினாள் கண்மணி

கண்ணெதிரே தோன்றினாள்
கணநேரத்தில் மறைந்திட்டாளே

இதயத்தை குடைந்து
இல்லாததை படைக்கிறாள்

விழிகளில் விசித்திரம்
விண்மீன்களின் சித்திரம்

முன்னழகில் மோகமோ
மூடிவைத்த மோகனமோ?

சல்லிக்கட்டு காளையாய்
சலிக்காமல் சஞ்சரிக்கிறாள்

வாசலுக்கு வந்தவளே
வாசமுள்ள பூக்களெல்லாம்

வாடிப்போயின உன்
வடிவமைப்பு கண்டு.



கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# காட்சிகள் கற்பிக்கும் வாழ்க்கைப் பாடம்!

பிறப்பு சிறப்பானதா? இறப்பு சிறப்பானதா?
பிறந்தவ ரெல்லாம் இறந்ததுதான் ஆதல்வேண்டும்!
பிறப்பைக் கொண்டாடும் நமக்கிறப்பை எதிர்கொள்ள
பயிற்சி தருவாரிங்கு யாருண்டெனயான் எண்ணுவதுண்டு!



அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாளினும் மண்ணிலவர்
வேண்டுதல் வேண்டாமை அற்றவராக வீழ்ந்தநாளில்
தானொரு சராசரி மனிதரல்லன் என்பதை
தன்னைக் கொன்றவனை மகனென அன்புபாராட்டியும்
தான்வணங்கிய இறைநாமத்தை மும்முறை சொல்லியும்
தன்துயர் பொறுத்து தன்னிதழ்மலர்ந்து இறந்தமுறையில்
மண்ணிற்கு தானொரு மகாத்மாவேதான் எனக்காட்டி
விண்ணையடைந்த தாலெனக்குவந் தநாளேசிறப்பாய்த் தெரிந்தது!

இராகவேந்திரர் திரைப்படம் பார்த்தபின்பு அப்படத்தின்
இறுதிக்காட்சி இன்றுமெந்தன் கண்களில் நிழலாடுகிறது!
'மாதவன் அழைக்கிறான்' என்றுமகோன்னத ஞானியவர்
மாண்புடன் நடந்தநடை மரணத்தை அடியேன்
இப்படித்தான் எதிர்கொள்ள வேண்டுமென்ற எண்ணம்தந்தது!

இக்காலபட மாம்சிறுத்தையில் நடிகர்கார்த்தி சிரித்துக்கொண்டே,
காவலனாய் மரணத்தை எதிர்கொள்ளும் காட்சி,
காலமது முடியும்வேளை மரணத்தை எதிர்கொள்ளலில்
மரணத்தை நினைத்துவருந்தா நன்றியுணர்வுடன் விடைபெறுதல்
மானிடர்யாரும் பழகுதல்வேண்டும் என்றவெண்ணத்தை எழுப்பியது!

இராட்சசி படத்தோடு ஆசிரியனடியேன் மாறுபட்டாலும் ஒருகாட்சி,
இதயம்நிறைந்த தந்தையார் இறந்துவிட தனியொருவளாய்
நாயகியவள் சுடுகாட்டில் நிற்குமந்த காட்சியெனக்கு
நானுமந்தநெஞ்சுரம் பெறவேண்டும் என்றவெண்ணம் தந்ததுவின்றோ
பாரதப்பிரதமர் மோடிதன்தாயின் பூதவுடலைச்சுமந் தவருங்காட்சி
பாரினிலவரைப் போலொருவுன்னத தலைவன்வேறிங்கு யாருண்டென
பாமரனென்னை எண்ணச்செய்து பண்பிலுயர் மோடியைப்போல்
பாரினில் நீயும்நடையிட முயல்க என்கிறதே!

கவிஞர் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# கூண்டிற் கிளி வளர்ப்பார்!

வல்லமை பேசி உன்னை மணமுடிப்பார்
மணந்த பின் பெற்றோர் வீட்டிற்கு செல்லாதே என்பர்
தான் வைத்ததுதான் இங்கு சட்டம்
பெற்றவர் படும் வேதனையை அறிவாயோ நீ!
பத்து மாதம் சுமந்து பெற்று
கல்வி கற்க வைத்து
ஆளாக்கியவர் நிலை அறிவாயோ பெண்ணே!
உனக்குன்னு ஒரு மனம் உண்டு
நல்லது தீயது பற்றி அறிவாயோ
தேம்பி தேம்பி அழுவதால் பயனென்ன
பெரியோர் அறிவுரையை கேட்டாயோ
ஓடிஓடி உழைத்தவன் அருமையை பார்த்தாயோ!
பெண் குழந்தை பெற்றவனுக்கு மட்டுமே தெரியும்
மூச்சு விட்டு அமருகையில் பிள்ளையைக் கட்டி அணைத்து
முத்தம் கொடுக்கையில்
அன்பு மழையில் நனைகையில் பார்த்தாயோ
பெண்ணே நீ கூண்டில் அடைப்படாதே
கற்றது கைமண் அளவு என்பது தெரியுமே
அதனை நினைத்து வாழ்ந்திடு
மணந்தவன் மனதில் நீங்கா இடம் பிடித்திடு
பிறந்த வீட்டிற்கும் புகுத்த வீட்டிற்கும்
உன்னால் பெருமை சேர்
தலை குனிவு வாராமல் பார்த்துக் கொள்
உன் குடும்பம் மட்டுமல்ல
இவ்வையகமும் உன்னை
தலை தூக்கி நிறுத்த செய்யும்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# சூழ்ச்சியின் அம்பலம்

சூரர்கள் என்று நாங்கள்
அவர்களைப் போற்றினோம்
மகுடங்கள் சூட்டி
அழகு பார்த்தோம்
பகடைக்காய்கள் நாங்கள்தான்
என்று அன்று நாங்கள்
அறிந்திருக்கவில்லை
தூண்டிவிட்டு பேதம்
வளர்த்ததை
வெறும் பேதம் மட்டும்
என்று நினைத்து விட்டோம்
அது மிலேச்சத்தனமான
காய் நகர்த்தல் என்று
அறிந்திருக்கவே இல்லை
மொத்தமாய் எங்களை
குத்தகைக்கு விட்ட போது
வாரிச்சுருட்டி விழுங்கி
ஏப்பம் விட்ட போது
மண்ணோடு சேர்த்து
எங்கள் மூச்சையும்
களவாடிய போது
கருவறைச் சுவர்களைக்கூட
கடித்துக் குதறிய போது
அஸ்தமனங்களில்
மாத்திரமே நாங்கள்
விழித்தபோது.



அப்போதுதான் அறிந்து கொண்டோம்
சூழ்ச்சி அங்குதான்
இருக்கிறது என்று
சூழ்ச்சி அங்குதான்
உருவானது என்று.

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# பொல்லாத காதல்

உன்னோடு பேசும் போது மட்டும்
உயிரோடையில்
நூறு பூக்கூடையாகிறேன் காதலில் !

பொல்லாத உன் காதல்
எனை தீண்டிட
நித்தமொருசெடியில்
பூக்கின்ற பூதுப்பூவின் பூவாசம்
போலாகிறேன் காதலில்!

உன் விழி
நோக்கா எந்நாளெல்லாம்
விடியாத நாளாக
உனை தேடி
வீணாக கழிகின்றன காதலில்!



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# ஏக்கத்தின் தாக்கம்

தாய்ப்பால் அவசியம்போல் கல்விப்பால் அருந்து
கற்ற மனிதருக்கு எவ்விடத்தும் விருந்து.
தவற விட்டால் தேவைப்படும் மருந்து
கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றேயென்ற
சங்க இலக்கிய வரிகள் நினைவாகின்றன
கற்றிடுவீர் இளமையிலே சென்றிடுவீர் புலமையோடு
மறந்தும் வாய்ப்பைத் துறந்து விடாதே
இளமையில் கல்வி சிலையில் எழுத்து
இல்லையேல் பணிசெய்தே ஒடிந்திடுமே கழுத்து
நலனும் வளமும் தந்திடும் கல்வி
பலன் பெறாவிடில் ஏற்படும் தோல்வி



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# யாருமற்றவனின் இரவுகள்

உடன் இருப்போர் உடன் வருவதில்லை!
உடன் உறங்குவோர் உடன் இருப்போரில்லை!
பகலெல்லாம் இரவுகளாகவும்!
இரவெல்லாம் பகலாகவும் நீள்வதுண்டு!

ஒவ்வோரு நாளும் ஒர் இடம்!
ஒவ்வோரு நாளும் ஒர் துணை!
இரவில் பார்க்கும் முகமதை பகலில் காண்பதில்லை!
பகலில் காணும் முகம் இரவில் தெரிவதில்லை!



ஒர் நாள் உணவை ஏல் என்றால் ஏளாது!
இரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாது!
உறக்கம் உணவை சார்ந்தது!
உணவு உறக்கத்தை சார்ந்ததல்ல!

மழை பொழியும் இரவுகள் ஏகாதேசிகள்!
கடும் கோடை ராத்திரிகள் சிவனுக்கு நேர்ந்தது!
எப்போது விடியும் என பாதி இரவுகளும்?
எப்போது கவியும் என பாதி பகல்களும்?

பரிதவிப்பினூடே பறக்கிறது!
உயிர் மட்டும் பிரியாமல் படுத்துகிறது!
நாய்களுக்காவது பகலுறக்கம் வாய்க்கிறது!
நாயினும் இழிந்த நாங்கள் விழித்து கிடக்கிறோம்!
விடியாத நாட்களில் உழன்று சுழல்கிறோம்!

உணவு உடை உறையுள் எல்லாம் கேள்விக்குறி?
தனியொருவனுக்கு உணவில்லை எனில்?
இன்னும் அழியவில்லை ஜகம்!
இன்னும் பிரியவில்லை உயிர்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# தேடுகிறேன்

தேடித்தேடி தொலைந்து போனேன்
தேடலிலே நானும்

நல்லொழுக்கந்தனை குருதியில் இணைத்து
நல்வரவுக்காக என்னைத் தேடுகிறேன்!

நிதர்சன அன்புடனே நிம்மதியையும்
புதைத்து வைத்துள்ள என்னைத் தேடுகிறேன்!

நட்பின் நன்மைகளை பிறருக்கு உணர்த்திட
நானும் என்னைத் தேடுகிறேன்!

உறவுகளின் உன்னதத்தை
இன்முகத்துடன் கொடுத்திடவே
என்னைத் தேடுகிறேன்!



விளங்க முடியாக் கவிதை என்று
பலர் உரைக்க பிறர் வியக்கும்படி வாழவே
என்னைத் தேடுகிறேன்!

நேசக்கரமதை நீட்டி பொய்மை களைந்து
மெய்யுடன் வாழ்ந்திடவே
என்னைத் தேடுகிறேன்!

தேடுகிறேன் நானும்
மெய்த் தேடல்களில் தொடங்கிட்டேன்
எனது தேடுதலையே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# வழி அனுப்பிய காதல்

அன்பு குடிலுக்குள் நாம் இருந்தோம்
உடன்பிறவா உறவாக
மழை நீராய் சிதற வைத்தாய்
என்னை மட்டும் ஏனடி
அன்று என்னோடு குடை பிடித்த நீ
இன்று என்னை நனைய விட்டுசென்று விட்டாய்
தேடுகிறேன் உன்னை
எனதருகில் நீ இல்லை

நான் தூங்க நீ அரவணைத்தாய்
தூக்கம் கலையும் போது
கண் காணாமல் போனாய்
கண்ணீரில் கரைகிறேன்
கண்டு கொள்ளாமல் செல்கிறாயே நீ



அன்பாய் பேசி அரவணைத்த நீ இன்று
நான் யாரென கேட்கிறாயே
ஏதுமறியா குழந்தையாய்
ஏனோ என் அன்பு இன்னும் புரியவில்லை உனக்கு

உன்னை வைத்து பல்லாயிரம் கனவுகளை
என்னுள் விதையென விதைத்தாய்
அவை முளையிடும் போதே
பிடுங்கி எறிகிறாயே பெண்ணே
என் நெஞ்சம் இதை தாங்கிடுமோ கண்ணே!

என் மனக்கல் மேல் உன் அன்பை
சிலையாய் நான் செதுக்கையிலே!
சிறிதேனும் என்னை உணராது
உடைத்து எறிந்தவளே!
சிதறும் என் நெஞ்சுக்குள்
காயங்களை செப்பனிட்ட பெண்ணே
என்னை அழ வைத்து நீ சிரிக்கிறாய்.
இன்னும் நீ உணரவில்லை என் வலியை
என்றோ ஒரு நாள் உணர்வாய்
என் காதலை.

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்

# காதலும் காய்ச்சலும்

ஊடலுக்கும் கூடலுக்குமான
இடைவேளையினில்
உன் நினைவுகள் மட்டுமே
சொந்தமாகின.

அருகினில் அணைக்கவுமில்லாத
தொலைவினில் நினைக்கவுமில்லாத
உன் உணர்வுகளின்
தற்கொலை சிதையினில்
தானாக சபதம் ஏற்றது
என் மனம் உன்னைக் காணாதிருக்க!

ஆனால்
உன்னைக் கண்டவுடன்
சத்தியங்கள்
சாத்தியங்களற்று விடுகின்றன.



இதழ்களுக்கு முன்னரே
இமைகள் உடைக்கின்றன
இருவரின் மௌனத்தை!

விரல்களின் பிடியில்
வீணாகச் சாகின்றன
விரக தாபங்கள்!

இருவருக்குமான இடைவெளி
இன்பங்கள் மட்டுமே என்றிருக்க
ஈறில்லா துன்பங்கள்
ஈரமாய் கசிகின்றன
விழிகளின் விளிம்பில்!

அந்தமில்லா இந்த சந்திப்பில்
அத்தனையும் உணர்ந்தேன்.
தனக்கு வந்தால்தான்
தலைவலியும் காய்ச்சலும்
காதலும் கூட.

கவிஞர் ந.க.மணி,கிளியனூர்(திருவாரூர்)

# விழிகளின் வெளிச்சம்

சிறகுகள் அசைத்து பறக்கும் வானம்பாடியின்
விழிகளின் பார்வை
மண்ணில் தேடியதில்
ஊழலும் வறுமையும்
கைகோர்த்து திரிவதைகண்டேன்
பிஞ்சுமுகத்திலும் வறுமையைப்பூசி
ரசிக்கும் உலகில்
ஏட்டுக்கல்வியும்
எட்டாமலிருப்பதை ஏணிகளெதை
வைத்துத்தொடுவதோ
மண்ணை கூறுபோட
அனுமதித்த பச்சைமைகளை
தோலுரிக்கும் நீதிகளும் துச்சத்தில் விலைபோக
தோண்டிய குழிகளுக்குள் முளைவிடும் நஞ்செனும்
அநீதிகளை வேரோடு களைந் தெறிய
அக்னிபிளம்பின் துளிகளால்
விடைகொடு தேவதையே
தீரா வலிதரும் அறியாமையிருளை அகற்ற
அறிவெனும் சுடரை ஏற்றிடும் வேளையில்
தீபவிழிகளின் ஒருதுளி வெளிச்சத் தனலும்
திசையெங்கும் பரவி
தீமைகளும் சாம்பலாகட்டும்
வறுமையின் சுவடுகளும்
வரலாற்றில் இல்லாமல்போக
இல்லாமையொன்றால் சிக்கித்தவிக்கும்
கல்வியினைமீட்க
சிறகுகள் விரித்து தடைகளை தகர்த்து
வானில் பறக்கும் பறவைகளின் பயணம்
அறிவுப்பசியிலிருக்கும் மழலைகளுக்கும்
பதில் சொல்லட்டும்
இல்லாமையென்ற வார்த்தையும்
இல்லாமல் போயிட
கல்வியென்ற மாற்றுவழியால்
விழிகளைத் திறக்கும்
விழிகளின் வெளிச்சம்
விண்ணை தொடட்டும்.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# அம்மா குப்ப

சுத்தமான சுருதியில் கூவுவான்
இரவு சாப்பிட்ட ஃப்ரைட் ரைஸ் பொட்டலம்
காய் கனி வகையறாவின் அழுகிய எச்சங்கள்
அடுப்பங்கரையில் நெடுநாளாய்
கொட்டம்பரத்திய எலியின் சடலம்




முந்தைய நாள் எச்சித்தட்டில்
விழுந்த பாறை மீன் எலும்பு
பாப்பாவின் மூத்திரப்பஞ்சு
மாமியாரின் டயாபர்
இந்த மாத உதிரப்போக்கில்
நனைந்த பஞ்சு

சிகரெட் அட்டைகள், நூலாமடை
உதிர்ந்த மயிர்ச்சிருள், காய்ந்த மல்லிச்சரம்
உடைந்த கண்ணாடித் துண்டுகள்
காகிதக் குவியல், பாலித்தீன் பைகள்

இவை யாவும் நிரம்பிய
குப்பைக் கூடைக்குள்
கையைவிட்டு மக்காத குப்பைகளை
பிரிப்பான்

பிரித்த குப்பைகளை பச்சை சிவப்பு
பீப்பாய்களில் கொட்டுவான்
அவனது முகம் கூட
சரியாகப் பார்த்ததில்லை

எப்போதும் வாசலில்
காலிக்கூடை மட்டுமே இருக்கும்
ஆனால் அன்று குப்பை
அப்படியே இருந்தது

"கொடுக்குற சம்பளம் போதலன்னு
கையில் வேற அம்பது நூறுன்னு
வாங்கிடுறானுவ. ஆனா வேலய
ஒழுங்காச் செய்ய வலிக்குது"
சிறுபெருங்குமுறல்கள் தெருவெங்கும்

ஓரிரு நாட்களில்
பன்றிக்காய்ச்சல்
விழிப்புணர்வுப் பிரச்சாரம்

குப்பைவண்டியில் கிடந்த
கண்ணீர் அஞ்சலி போஸ்டரில்
அமரர் துளசி மாடன்
என்ற பெயருக்கு மேலே
இருந்த முகத்தை இப்போதுதான்
சரியாகப் பார்க்கிறேன்
மாடியில் இருந்து.

கவிஞர் பாபுகனிமகன்,இளையான்குடி

# கிராமியக் கவிதை

**அச்சுவெல்லப் பேச்சால**
**அடிமனசக் கவுத்தவளே!**

காட்டுக் குயிலா இனிக்க பேசயில
காதல் காய்ச்ச மாமனுக்கு அடிக்குதடி!
முழுநிலவா முறச்சு நீ பேசயில
முழுசா எனக்கு கிறுக்குப் புடிக்குதடி!

மான் கண்ண வைச்சு மயக்கயில
மச்சானுக்கு மச்ச தான் கூடுதடி!
தங்கச்சில நீ கடந்து போகயில
தலைக்குப் போத தன்னால ஏறுதடி!

கோவப்பழ உதட்டால முத்த குடுத்தே
காங்கேயக் காளய ஓயாம கொல்லேன்டி !
சண்டிவீரன் சந்தோசமா செத்துபுட்டு பொழக்குறேன்டி !
மாமன் பெத்த எங்கவீட்டு மனோரஞ்சிதமே!



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்

# வாழ்வெனும் சித்திரத்தில்



வண்ணங்களுக்குள் அமிழ்ந்து எழுந்து
வெள்ளைத்தாளில் கிறுக்கியபடி
அலைகிறது தூரிகை.
விரல் பிடித்தவன் எண்ணங்கள்
வழிந்தோடியபடி
வண்ணங்களின் திட்டுகள்
சித்திரமென மடிகிறது தாளில்.
தனியே கிடந்த வண்ணங்கள்
கலந்துறவாடி மீளமுடியா
ஒற்றைக் கனவை
உயிர்ப்பிக்கின்றன ஓவியமென.
நிறங்களைச் சுமந்த தூரிகையும் சிலிர்த்து
கர்வத்தில் விரிய
எண்ணத்தை விரித்த விரல்கள்
சூரியனைப் பிரசவித்த பெருமையில்
சித்திரத்தில் லயித்திருக்க
எதையும் வெளிக்காட்ட இயலாமல்
உயிர்ப்பை ஏந்தியபடி பறந்து கொண்டே
காற்றோடு பேசித் திரிகிறது
வெள்ளைத் தாளின் வண்ணக்குமிழிகள்
காலவெளியில் விளையாடும்
மனித வாழ்வை போல.

கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# தூரமில்லை வானம்

வானைப் பார்க்கையில்
கைப்பிடித்து நடந்தது
நிலா

நட்சத்திரக் கூட்டத்தில்
அப்பாவைத் தேடுகிறாள்
அனாதை இல்ல குழந்தை

ஆசையை அடக்கிவிட
புதிய மரம் தேடுகிறான்
கலியுக புத்தன்

கற்களை உரசியதில்
பற்றிக்கொள்கிறது
ஆடை துறந்த காமம்


நுரை ததும்பிய குவளையில்
நூறு குமிழிகளாய்
வெள்ளி நிலா

தூரமில்லை வானம்
நம்பிக்கை படிகளில் எழுதிய
வானமே எல்லை



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# காலம் வரையும் ஓவியம்



கொவ்வா வாய்மொழி
கொஞ்சும் குழறல்
நெடுங்குழல் அசைந்து
நடை நேர்த்தி பயின்றிவள்
நயம்கூறும் மொழி அறிவீரோ

இழைப்பின்னி மண்சேரும்
மாமழை இதழசைவில்
உரைக்கும் பொருள் அறிவீரோ

இல்லையென கவியுரைக்கும்
இடைபற்றும் செப்புக்குடம்
சிந்தும் செம்மொழி யாதென
சிற்ப உளி சத்தம் உரைப்பதறிவீரோ

அழிக்க அழிக்க
திரும்ப வரிக்கப்படும்
வரலாறே இவளென
தினம்தினம்
காலம் உரைப்பது அறிவீரோ!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# விருப்பமும் வெறுப்பும்



ரசிப்பவன் விழியிலே
பார்வைக்கு எட்டுபவை யெல்லாம்
அழகு தான்.

அழகு நிறைந்த
அதிசயம் பார்வைக்கு முன்
நின்றாலும் ரசனை இல்லாதவன்
விழிக்கு கற்சிலைதான்.

உணர்வும் அது போலவே
உணர்பவனுக்கு வலி
உணராதவனுக்கு நாடகம்.

கசிந்த விழி நீரும்
காகிதம் நனைத்து
வடித்த கடிதமோ.

பெறாதவனுக்கு
பொக்கிஷம் தான்

பெற்றவனுக்கு
கால் மிதியாகினால்

வலியா?
வேதனையா?
புரியா உணர்வுகளும்
புரிந்திடக்கூடுமோ என்ற எண்ணங்களும்.

ஆதி சுட்டெரித்த மேனியோ
இன்று பரிதியின் மறைவிலே.
மழுங்கிய மனதோடு
பாதை மாறிடவுமில்லை.
பாதை தொடரவும் இல்லை.

அதே இடம்
அதே பாதை
அதே காதல்
அதே வலி
அதே ஏக்கம்

அனைத்தும் நெஞ்சகத்தோடு
வெளிக்கொணர விருப்பமின்றி
வெறுப்பை சம்பாதித்தவளாய்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# யாரேனும் ஒருவர்

சிறிது
தூரத்திற்குப்பின்
என் பயணம்
நிறைவடையலாம்.



வானில் வலம்
வந்த சூரியன் அந்தியில்
மொத்தமாய்
அடிவானில் மறையலாம்.

தன் தேடலை
முடித்தப் பறவைகள்
இனிதே
கூடு திரும்பலாம்.

இக்கவிதை
வாசிக்கப்படாமல்
சிலர்
கடந்து போகலாம்.

உங்களில்
யாரேனும் ஒருவர்
இதே கவிதையை எழுதி
முடித்திருக்கலாம்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# சிறகிழந்த குருவியொன்று

இதயம் இங்கே அழுகிறது
இருவிழிகள் மழையைப் பொழிகின்றன.



கல்விச்சாலையில் பயணிக்க
எந்தன் கால்கள் துடிக்கின்றன.

கொடிய வறுமை தடையாகி
எந்தன் கனவுகள் பறிக்கின்றன.

புத்தகம் ஏந்த வேண்டிய கரங்களின்று
புழுதியில் விழுந்து உழல்கின்றன.
பிஞ்சு நெஞ்சின் ஆசைகள்
அஞ்சி அடங்கிப் போகின்றன.

என்னைப் போல
சிறுவர்களை காணும் கண்கள் துளிர்க்கின்றன.
இன்னும் பொல்லா வறுமைநிலை
என் இலட்சிங்கள் கொன்று புதைக்கின்றன.

குடும்பப்பாரம் தலைமீது பாறாங்கல்லாய்க் கனக்கிறது.
கல்விக்கனியோ தொலைதூரம் சென்றே
ஒழிந்து விடுகிறது.

இளமையின் இன்பம் மூச்சடைத்து
இந்தமண்ணில் புதைகிறது.
இழப்பின் வலியோ எனைச் சூழ்ந்து
ஊசிமுனைபோல் குத்துகிறது.

கலையும் எனது கனவின்று
தூரதேசம் செல்கின்றது.
கனியும் ஒருநாள் என்வாழ்வு
உள்ளம் அமைதி கொள்கின்றது.

கவிஞர் மக்கொனையூராள்,இலங்கை

# வறுமையின் வர்ணங்கள்

ஏட்டில் எழுதப்பட கூடாத ஒன்று வறுமை!
ஆண்டவனால் படைக்கப்பட்ட அனைத்தும், அனைவருக்கும்
சமமெனில் வறுமை மட்டும்
ஓர் மர்மமாகவே திகழ்கிறது. இவ்வுலகில்?



வறுமைக்கு நிறங்கள் கிடையாது
வறுமையால் வாழும்,
மனிதர்களுக்கு நிறங்கள் உண்டு
பசி என்னும் பாதை மட்டுமல்ல

ஏற்றத்தாழ்வு,வேறுபாடுகள்,
அறியாமை,பணம்,குற்றம்,கொலை, கொள்ளை,
போட்டிகள் போன்ற பல்வேறு விதமான
மாய நிறங்கள் உண்டு

மானிடராய் பிறப்பது எளிது
மானிடராய் வாழ்வது கடினம்
காலம் களவு போகும் நேரம்
மனநிலை வறுமையில் வாடும்

நாம் மட்டும் அடிமை அல்ல
பூமியில் பிறந்த ஒவ்வொரு உயிரும்
ஒரு கணம் வறுமைக்கு அடிமையே

வறுமையின் வலியில் வாழும் மனிதனுக்கு
சூரியன் வழக்குப் போடும் அன்று!
சுற்றமும் தெறித்து ஓடும் கண்டு

வறுமையில் வாடுபவன்
ஆடையின் அலங்காரம் கர்வம் கொண்டு
கண்ணீர் வடிக்கும்

காலம் ஒருநாள் பதில் கூறாத என்று
கண்ணில் பட்டதை புசித்து.
கரங்கள் ஓங்கி நிற்கும்
ஒரு நாள் வறுமையை எதிர்த்து.

இந்நாட்டில் மட்டுமல்ல
உலகம் எங்கும் கையேந்தும்
சாமானிய மக்கள் இன்றளவும்
கை ஏந்தி கொண்டுதான் இருக்கிறார்கள்.
வேடிக்கை பார்ப்பவர்கள்
பயணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

வறுமை என்னும் கொடிய நோய்
வழக்கம் இல்லா மனிதர்கள் இருக்கும் வரை
ஒழியாதோ.

என் வரிகளுக்கும் வறுமை வந்தது
குறைவாக கூறினேன் என்று?

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# விடைப்பெறுகிறேன்

நீதான் உலகம் என்று
வாழ்ந்த எனக்கு
யதார்த்தத்தைக் காட்டியது
இந்த ஏமாற்றம்.

நாள் முழுதும் பேசிக் கொண்டேன்
தொந்தரவு என்று தெரியாமல்.
என் அளவு கடந்த அன்பு
உன்னில் அலட்சிமானது.
சிறு சிறு மாற்றத்தில்
ஆரம்பித்த உன் நடவடிக்கைகள்
காலப்போக்கில் முழுவதுமாய்
என்னை ஏமாற்றிவிட்டன
உயிரற்ற உடலாய் ஊசலாடுகிறேன்.
காதல் தந்த
நினைவுப் பரிசுகளை
மறக்க நினைக்கையில்
இயலாத காரியம் ஒன்றே.
இருந்தும்
மீண்டும் உன் நிழலைக்
கூட நெருங்க நினைக்காதவளாய்
உன்னிடமிருந்து விடைபெறுகிறேன்.



கவிஞர் சன்ஹா நிஜாம்

# மழைக்காளான்

அலை அலையாய் ஆசைகள்
மலை மலையாய் கனவுகள்
வற்றாத நதி போல் காதல்
எல்லாம் இந்த வாடிப்போன இதயத்தில்.

வறண்ட பாலைவனம்
சோலைவனமாக மாற
மழைத்துளி போல் அல்ல
புல்லின் பனித்துளி அளவே போதும் பாசம்.

இதை அறிந்த இதயம்
ஆசை கரம் நீட்ட
பட்டென எல்லாம் மாறியது
வேர்கள் துளிர்விட்டது.



அளவளாவிய ஆனந்தம்
அஞ்சாறு வருஷம் வாழ்ந்த நெருக்கம்
உயிருக்கு ஆதாரமானது
உணர்வுக்கு ஆணிவேரானது.

தவமாய் பொத்தி வைத்திருந்த
புத்தன் பாதையும், சித்தன் பாதையும்
நீராவியாய் காற்றில் கலந்தது
நீல வானமாய் வாழ்க்கை மின்னியது.

காலமும், வாழ்க்கையும் ஒரு சுழற்சிதானே
சுழலுக்குள் சிக்காத நீர்த்துளி உண்டோ?
மீண்டும் கருமேகம் சூழ்ந்தது
எல்லாம் மழைக்கு முளைத்த காளானானது.

கவிஞர் மதுகை,திருச்சி

# சங்கதியாய் நுழைந்த சங்கீதம்

சமத்துவமில்லா வாழ்க்கையில்
சந்ததிகள் ஏராளம்.
ராதையாய் நுழைந்து
ரகசியங்கள் தாராளம்.
கண்களால் அழைத்த
காவியங்கள் பாராளும்.
மதியழகு பொருந்தி
மாதுளையாய் உதிர்ந்து.
பகிர்ந்த சுளைகளை
பரவசத்தில் மிதந்து.
தரணியாளும் வீரனும்
தாவணியில் குடியேறி.
நிதர்சனம் உறவினிலே
நித்தரையாய் கலைந்தவளே.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை


# போதுமடி பெண்ணே பரிதவித்தது

போதுமடி பெண்ணே
பயந்து மடிந்தது

போதுமடி பெண்ணே
கயவர்களைக் கண்டு அஞ்சி நடுங்கியது.

போதுமடி பெண்ணே
வன்முறைக்கு ஆளானது.

போதுமடி பெண்ணே
மூலையில் முடங்கியது.



தீய எண்ணத்தோடு தீண்ட வருபவர்களை
தீயிலிட்டு பொசுக்க பொங்கி எழுந்து வா

நிமிர்ந்து நில்லடி
நேர் கொண்ட பார்வை பாரடி பெண்ணே
கலாச்சாரம் பின்பற்றி வாழடி பெண்ணே.

ஆடையை அங்கம் தெரியாமல்
அணிந்து கொள்ளடி பெண்ணே.

பாலியல் வன்கொடுமை செய்ய வருபவனை
பாதத்தால் நசுக்கி விடடி பெண்ணே.

வல்லவனுக்கு புல்லும் ஆயுதமாம்
உனக்கு உன் நகங்களும்
பற்களும் கூர்மையான ஆயுதமாகுமே

திடமானவர்கள் பெண்கள்
இதை உணர்ந்து கொள்ளடி

பலவீனம் வேண்டாமடி
பலம் நம் மனதிலடி.

மானத்தை பறிக்க வருபவனை
மண்ணோடு மண்ணாக்க
பொங்கி எழுந்து வா பெண்ணே.

கவிஞர் சுமதி தசதரன் சென்னை

# உடலினை உறுதிசெய்

நரம்புகள் புடைக்க
எதிரிகள் தெரிக்க
பார்வையே போதும் படைகள் நடுங்க
உடலை உறுதி செய்
வேகம் கொள்
மோகம் விடு
முயற்சி எடு
பயிற்சி கொள்
தூக்கம் கொள்
ஏக்கம் மற
ஆக்கம் செய்
அழிவை விடு
மனதை மாற்று போர் கொள்ள
உடலை ஏற்று திறம்பட
மனதில் உறுதிகொள் செயல்பட
சிந்தனை கொள் உன்னோடு
செயல்படுத்து பயனோடு
நேரமில்லை துணிச்சலோடு
தூரம் இல்லை சோர்வை விடு
இலக்கை நோக்கி பார்வை இடு
இல்லம் தேடி வாய்ப்பை கொடு
எல்லை இல்லா அன்பை கொடு
எதையும் தாங்கும் இதயம் உன்னோடு
இதயம் இழுக்கும் இரத்தம் உறுதியோடு பாயும்
வயதுமீறி எதையும் செய்தலின்றி ஓயும்
துணிச்சலோடு செயல்படு
துன்பமில்லை ஒன்றுபடு
படைகளை சேர்த்து
தடைகளை உடைத்து
முன்னெடு படையெடு முறையிடு தகர்த்தெறி





கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# தேவதை

தேவதைகள் வரம் கொடுப்பவர்களா?
வரமாகவே கிடைத்த என் தேவதையே!
வாரி அணைத்த கைகள் வசப்படுமோ!
மௌன வாழ்வில் இன்னிசை மீட்டியவளே!
உறவுகளுக்கு உயிர் ஊட்டியவளே!
இளையவளே, இன்பத்தின் எல்லையே!
எதிர்ப்பார்ப்புகளும் ஏங்கி நிற்கும் உன் அன்பிற்கு!
புன்னகை பூவே!
தேன் சொட்டும் சொல்லுக்கு சொந்தக்காரியே!
என்றென்றும் புன்னகை மட்டுமே,
துளி கண்ணீரும் வேண்டாமே!
உலகே புரண்டாலும் துணிவாக நில்!
சம்பவமான உன் பிறப்பை சரித்திரமாக்க!



கவிஞர் எழிலி

# முல்லையே!

முல்லையே நீ இல்லையே என
நான்வாடினேன்

முல்லைப் பூ என்றால் உனக்கு கொள்ளை
இன்பம்
எல்லையில்லா ஆசை
எப்போதும் உனக்கும்
இல்லை என்றாலும்
தேடி பிடித்து வாங்கி
வருவேன்
எல்லையைத் தாண்டி கூட சென்றிடுவேன்



இதுவரை சிறு தங்கம்கூட உனக்கு நான்
எதுவும் வாங்கி தரவே இல்லை
என்தங்கமே!

பவள மாலை மட்டும்
வற்புறுத்தி வாங்கி தந்தேன்
வளமே நான் கண்ட
பிறகு உனக்கு

தங்கத்தை விரும்பாத
தங்கமே நீ! - ஆம்
தங்கமே நீயே நல்ல தங்கம்
உனக்கு எதற்கு தங்கம்

தங்கம் தான்வருத்தம் கொண்டது
அதை நீ
தாங்கவில்லை என்று
தினம் தினமே


பூவை விரும்பிய பூவே
பூவும் பொட்டோடும்தான் போனாய்

பூவையே நான் அங்கு உனக்கு
கட்டிய மஞ்சள்தாலியே நிலைத்து
நிழல் படத்தில்தான்
நிலைத்து நிற்கிறது
நிஜமாவே நீ என்றும் புண்ணியவதி

மனம் எங்கும் நிறைந்தவளே
மகீதா ராணியே
மனம் திறந்து உனை
வாழ்த்தி தினம் பாட
உள்ளம் பொங்குவது
கவிதை ஊற்றாய்
சுரக்குது
எல்லாம் உன் வடிவே
எல்லாம் உன் அருளே

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# லிமரிக்




கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# கல்லூரி முதல் நாள்

பல்கிப் பெருகும் பல கனவுகள் கண்களில்
உள்ளே நுழைந்ததும் கண்டேன்
வாழ்த்துச் சொற்களில் தாமரையின் முகத்தை
இனம் புரியா இன்பம் இன்னல்கள் மறக்கச் செய்தன
முதல் வகுப்பு தொடங்கியது
திரையிசைப் பாடல்களில்
கண்ணன் ஐயா குரலில் நாட்டுப்புறம் பற்றி
முழங்கின கலகலவென சிரிப்புச் சத்தங்கள்
அழகிய இறைவனாய் அன்பில் ஐயா
கரங்களில் காத்திருந்த புத்தகப் பரிசுடன்
இன்னும் சில அரிய தகவல்களுடன்
மற்றுமொரு பேராசிரியர்
எதிர்காலம் பற்றிய உரையாடல்கள்
சில எங்களுக்குள் சிறிது நேரம்
இயல்பாய் இனிமையாய் முடிந்தது
இன்றைய வகுப்பு.



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு மாவட்டம்

# எத்திசையிலுமே

எத்திசையில் பிறந்தவரோ
எங்கெங்கு வளர்ந்தவரோ
எப்படி முடி போட்டனரோ
எவர் இட்ட ஆணையோ
எத்திசை மனிதரும்
எழுந்து மனமுவந்து வாழ்த்துவரே!

தினம் தினம்
திருநாளாம்
திசையெட்டும்
திரிந்து உழைப்பவர்க்கே!

திசைக்கு ஒரு கடவுள்
தினம்தினம் தொழுவதால்
திருவருள் தருவார்
திருவருள் கடவுள்.

திதி, கிழமை, திசை
பாராமல் உழைக்கும்
திக்கற்றவர்க்கு
தெய்வமே
துணையாகும்.



கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# கடவுள்

கண் கண்ட கல்லா கடவுள்,
மனம் நிறை சொல்லா கடவுள் ,
தமிழ் வாசகப் பிரியரா கடவுள்,
நாம் உணரா உருவமா கடவுள்,
மங்கை தந்த மழலையா கடவுள்,
அம்மழலை உடையாளா கடவுள்,
அழும் மழையா கடவுள்,
அல்ல அசையா மலையா கடவுள்,
ஒய்யாரமாய் வாழ்பவனாக கடவுள்,
ஒப்பாரி ஓசையில் இருப்பவரா கடவுள்.

தூணிலும் அவன் என்றார்,
துரும்பிலும் அவன் என்றார்,
அணுவிலும் அவன் என்றார்,
அண்டமே அவன் என்றார்,



எத்தனையோ அவன் என்றால்
இப்பாடுபடும் மக்கள் இன்பத்தை
இப்படி இடுக்கியது ஏனோ?

யார் தான் யார் தான் கடவுள்
கடவுளே சொல்
யார் தான் யார் தான் கடவுள்

மனிதம் உணர்ந்து கடந்தவர்கள் கடவுளாகிறார்கள்,
கடவுளைத் தொடு முயற்சியில் சிலர் மனிதன் ஆகிறார்கள்,

கவிஞர் ஆரூர்.சிவ.மணிவேல்

# நினைவுகள் அழகு

நீரோடை போல நித்தமும் அழகு
நீளும் வாழ்க்கையில்
நீங்காத உண்மை அன்பு அழகு.

விழி நீர் வழியும் முன்
விரல்நுனியில் துடைத்திடும்
தோழமையின் அழகு.

இமையில் இருக்கும் உறக்கம் தவிர்த்து
தினம் தினம் கவிதைகள்
உதிக்கும் நினைவுகள் அழகு.

ஆறாத காயங்கள் நெஞ்சில் இருக்க
அனைத்தும் மறக்கும் அதிசயமாய்
மழலையின் புன்னகை அழகு.

எண்ணங்களை பல வண்ணங்களில்
பாமாலை தொடுத்த
அழகான கவிதைகளின் சங்கமம் அழகு.



என்னுள் விதைத்த கவிதைகள்
ஏட்டில் பதிந்த  எழுத்துக்கள் அழகு.

கையளவு இதயத்தில் கலையாத
உருவமாய் உந்தன் முகம் அழகு.

கரையை தொட்டுவிட துடிக்கும்
கடல் அலை போல் உந்தன்
அழகான நினைவுகள் அழகு.

உன்னிடம் என்னை தொலைத்தேன்
நிழல் போல் நிதமும் தொடர்கிறாய்.
நிரந்தரமென்று எதுவும் இல்லை
உன் நினைவுகளை தவிர என்னிடம்.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# மறவா நேசம்*

உயிர்ப்பான ஞாபகங்கள்
தந்து உயிர்
ஓடிக்கொண்டிருக்கும்

பாசத்தில் படியேறும்
பிரிவில் உயிர் உருகும்

தொலை தூரம் வாழ்ந்தாலும்
தொல்லை தாண்டித் தொடரும்

முரண்பாடுகள் மறந்து
புரிதல்களில் வேரூன்றும்

விட்டுப்பிரிய நேரிடினும்
மீள் சந்திப்பில் ஒட்டிக்கொள்ளும்

ஒருயிர் நொந்தால்
மறுகணம் தன்னுயிர் தவிக்கும்

உயிரே தான் போனாலும்
ஆபத்தில் காட்டிக் கொடுக்காது

பொறுப்புகளைக் கூட
தன்பொறுப்பாய் ஏற்றுக் கொள்ளும்

உடையும் தருணங்களிலும்
சிதைந்து போகாது

மறவா நேசத்தில் இல்லை
தினம் மாறும் வேஷம்



கவிஞர் ஆய்ஷ்,கம்பளை

# ஆசைக்கிளியே அத்தைமகளே

பனையோலைக் கொலுக்கட்டை
அத்தைமக நாட்டுக்கட்டை.



கறந்த பாலுடன்
கருக்கலிலே நிக்கையில.

புருவமும் உயருதடி
புத்தியும் மாறுதடி .

கூப்பாடு போடாம
சொல்லுறதக் கேளுபுள்ள.

புள்ளி வைக்காம
கோலமிடுறியே கோதைமலரே.

தள்ளி நிக்காம
நெருங்கித்தான் வாயேன்புள்ள.

பிஞ்சியிலே பழுத்தது நம் காதல்.

விஞ்சிக்கிட்டு போகாதடி
வெவரமா சொல்லுறேன்டி.

நெஞ்சில உன்பேர
குத்துன பச்சை ஆறலடி.

கள்ளிக்காடு சொல்லுமடி
பால்வடிய நம்பேர.

திரும்பித் பாரேன்டி
கண்ணாமூச்சி காட்டாதே.

எனக்குனு யாறிருக்கா
தாயவளும் போனாளே.

தாரமாக வாயேன்டி
தாயாக பாப்பேனடி.

கவிஞர் லா.பெனிஸ்,திசையன்விளை

# இருள் விலக்கும் ஒளி மாந்தர்

இரவு நகர்வது விடியலை நாடியே
இன்னல்கள் வாடுவது இன்பத்தைத் தேடியே

கவலைகள் கஷ்டங்கள் வரவாய் ஆனாலே
களிப்புகள் இஷ்டங்கள் காணாமல் போகுமே

களையெனும் கொல்லிகள் நீக்கிடச் செய்யவே
விளைநிலமாய் வாழ்வு ஆக்கிடச் செய்யவே



தளைத்தே இருள் நீக்கும் சூரியனாய்
மலைத்தே அருள் வார்க்கும் ஆதவனாய்

ஆயிடும் மாந்தர்கள் அகிலத்தின் காவலரே
ஆயிரம் அல்லல்கள் தாங்கிடும் மாவீரரே

கத்தி குத்துக்களாயும் துப்பாக்கித் தோட்டாக்களாயுமே
கஷ்டங்களை நெஞ்சில் தாங்கும் வள்ளல்களாவரே

கவலைகளை மனதில் மறைத்தே வாழ்பவர்களே
கருணைவழி சென்று அருளை அள்ளித் தருபவர்களே

இருளெனும் தடையகற்றி மருளெனும் மடை மூடுவரே
வருகை அதனாலே இரவும் பகலாகுமே

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# ஏனோ ஆசை ஏதோ பேச!





என்ன
நினைத்தாயோ
உன் உள்ளங்கை
பற்றும் வரை
உயிரில்
ஏதோ உருண்டதடி !

உயிரில்
உருண்டதை
உணராத குழப்பம்
நீ நகர்ந்து
போகையில்
உணர்ந்து உருகியது !

நேர்கொண்ட பார்வை
நேர்த்தியென
உற்றுக் காண்கையில்.
நடித்த விழி
நைச்சியம்
காட்டியதை
எவ்வாறு அறிந்தாய் !

ஏதோ ஆசை
ஏனோ பேச
அடம் தான்
கண்ணே!

இப்போது புரிகிறது
உன் பதற்றம்

இம்முறை மட்டும்
கேட்கிறேன்
மன்னிப்பாயா
கண்மணியே !

உனக்கொன்று
சொல்வேனடி
இது போன்றொரு நிலை
இனி ஒருபோதும்
வாராதடி !

அழகழயாய்
உயிர் திரட்டி
உனக்கு ஊட்டிய
நினைவுகள்
போதுமடி
இந்த ஆயுள்
முழுமைக்கும் !

உன் கண்ணில்
கவிதையாய்
வாழ்வேனடி!

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை

# சாதி



எத்தனையோ முறை
வெட்டப்பட்ட பின்னும்,
வெட்கம் இல்லாமல்
வளர்ந்து வருகிறது;
தலை மயிருடன் சேர்த்து
மனிதனின் ஆணவ சாதி!

கவிஞர் அனல் நிலவன்,கொசவபட்டி

# தயவுசெய்து வேண்டாம்

அன்போ பொறுமையே ஓரளவே
அர்த்தம் உள்ள வாழ்க்கையில்
அளவில்லாத சஞ்சலங்கள்.
சஞ்சலங்களும் சமாதானங்களும்
சண்டையிட காரணம் தேடியே
தத்தளித்த படியே தவிப்புடன் ஏக்கத்துடன் வாழ்க்கை
அன்பையும் அளவாய் கொடுப்போம்
பொறுமையும் கற்று பிறகு ரௌத்திரமும் பழகுவோம்.
தேவையான இடங்களில்.
அன்போ பொறுமையோ நம்மை
அழிக்க எக்காலமும் விடோம்.



கவிஞர் சிவானி,சென்னை

# இன்று முதல் என்றுமே

அவனால் வகுக்கப்படும்
அனைத்து விடையமும்
இறுதியில் பூஜ்ஜியமே
பூஜ்ஜியத்தில் இருந்து தொடங்குங்கள்

உங்கள் உறவுகளை கொஞ்சம் உற்றுப் பாருங்கள்
அதில் கடுகு அளவு கசியும் வஞ்சமும் பாசமும்
அதில் பட்டு தெறிக்கும் பகையும்
தட்டிவிட்டு எட்டு வையுங்கள்
எதார்த்தமான வாழ்க்கைக்கு பொட்டு வையுங்கள்



பூப்பதும் பின் காய்ப்பதும்
பூவின் பொழுதுபோக்கு
ஏற்றமும் ஏமாற்றமும்
இறைவனின் விளையாட்டு

நிதானமாய் நீந்துங்கள்
வாழ்க்கை கடலை
இளைப்பாற இடம் கிடைக்கும் வரை நீந்துங்கள்
காத்திருந்த காலம் வந்து சேரும்.

கவிஞர் அகல்யா,சேலம்

# இரு மான்கள்

இருமான்களும் துள்ளி விளையாடி ஓடும்
இருமாங்கனிகளை முன் கண்கள் தேடும்
இதழ்களில் தானாய் தேனூறும் நேரம்
இருவிழிகளும் சொக்கி மயங்கி மூடும்

ஆடையில்லா தந்த பாலும்
ஆசையெல்லாம் உண்டு நாளும்
தேகம் இரண்டில் இருந்த வறட்சி
பின்பு தேக்குபோல நல்ல வளர்ச்சி

விடியும் பொழுது உண்டு குளிர்ச்சி
விடிந்துவிட்டால் வரும் முக மலர்ச்சி
எதற்கும் உண்டு ஒரு காலம்
உடம்பில் எத்தனை புள்ளி கோலம்



கவிஞர் சு.வெற்றிவேல்,திருப்பூர்

# வேலுநாச்சியார்



வீரம்மிக்கத் தமிழச்சி! சிவகங்கை ஆண்டவரசி!
ஆயுதப்போர் வீராங்கனை! விடுதலைப்போர் போராளி!
ஆங்கிலரை எதிர்ப்பதற்கு வித்திட்ட முதற்பெண்மணி!
ஆயிரத்து எழுநூற்று முப்பதாண்டு ஜனவரியில்
மூன்றாம்நாள் தோன்றியவர்! ராமநாத சமத்தான
மன்னரான செல்லமுத்து விஜயரகுநா தசேதுபதி
சக்கந்தி முத்தாத்தாள் பெற்றெடுத்த ஒரேமகளே!
சக்கந்தி ஊர்தனிலே தோன்றியவர்! ஆண்வாரிசாய்
வளர்ந்தாரே! விளையாட்டு வாளீட்டி வில்லம்பு
குதிரையொடு யானைமீதும் இவர்தலதும் சிலம்பமென
ஆயுதங்கள் பயிற்சியெலாம் திறன்பெற்றார்! கல்விகற்றார்!
பன்மொழிகள் புலமைதனை உற்றாறே! பதினாறு
வயதினிலே சிவகங்கை ஆண்டமன்னர் முத்துவடுக
நாததேவரினை மணந்திட்டார்! இருபத்து ஆறாண்டு
இல்லறத்தைக் கண்டவர்தாம்! ஆயிரத்து எழுநூற்று
நாற்பத்து ஆறதனில் மணங்கண்டு ஆயிரத்து
எழுநூற்று ஏழ்பத்து இரண்டினிலே கேள்வரவர்
போரினிலே பிரிந்தாரே! உருதுமொழித் திறனாலே
ஹைதரலி ஒத்துழைப்பு பெற்றிட்டார்! ஆங்கிலரின்
எதிர்ப்பெண்ணி தற்காப்பு காரணத்தால் மாறிமாறி
முகாமிட்டு வாழ்ந்தாரே! மருதிருவர் கைகொடுத்தார்!
ஆங்கிலரை வென்றிட்டார்! வயதைம்பதில் ராணியானார்!
ஆங்கிலேயர் கொடியிறக்கி அனுமன்கொடி ஏற்றினாரே!
அறுபத்து மூன்றுவயது எட்டுங்கால் பேத்திதனை
இழந்ததனால் பெருஞ்சோகம் கப்பியதே! ஆயிரத்து
எழுநூற்றுத் தொண்ணூற்று ஆறதனில் டிசம்பரிலே
இருபத்து ஐந்தாம்நாள் மூச்சடங்கிப் போனாரே!
அறுபத்து ஆறாண்டு பதினோரு மாதமொடு
இருபத்து இரண்டுநாள் வாழ்ந்திருந்தார் அம்மாது!
நாட்டுரிமைப் போராளி புகழ்வாழ்க! வாழிமாதே!

கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# தேடல்

தேடல் தினந்தோறும் தொடரும்
பந்தம்
தேங்கிடாமல் ஓடிட தெளிவான
சிந்தையில்

ஆசை பெருங்கடல் அழகாய்
விரிகிறது
தீராத தேடலுக்குள் விதையென
விடியலும்

நீளும் இருளுக்குள் நித்திரை
மடியில்
உள்ளத்தில் தவழ்ந்திடும் உன்னத
ஓசையில்

ஆர்வமும் அதிகமாய் அகத்தினில்
வழிந்தோடி
பூந்தென்றல் கைப்பிடித்து
புதியராகம் பாடிடவும்




விடியாத பொழுதுண்டோ
விசும்பாதே மனமே
விடியலை நேசித்து விண்ணிலே
பறந்திடு

மடிதேடும் மனமோ மயங்கி
திரியுது
மனசாளும் நினைவில் மலரும்
விழியும்

அரிதாரம் பூசாத அகம்தேடும்
அன்பும்
பரிதாபம் காட்டாத பகட்டில்லாத
பண்பும்

கரைதொடும் அலைபோல்
ஓயாத தேடல்
நுரையென பொங்கி வழிந்தே
வண்ணமாய்

மறக்காத மனம்வேண்டி
மௌனத் தேடலும்
மாசற்ற அன்பில் இன்பமுடன்
தொலைந்து

நறுமணம் வீசிடும் நல்லதோர்
நட்பில்
நாளும் பொழுதும் பேசும்
அழகில்

புறம்பேசாத மனங்கள் தேடிடும்
உள்ளமும்
புரிந்து கொண்ட அன்பில்
நனைந்திடும் ஆசை

வசப்படும் வானமும்
வைராக்கியத்தின் பிடியும்
வண்ணக்கனவுகளும் நிறைந்த
நன்மையும்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# விழி அசைவில்

விழி மூடினால் அங்கேயும் வந்து
தொல்லை தருகிறாய்.
விழி திறந்தால் என் கண் முன்னே இல்லாமல்
அவஸ்தை தருகிறாய்
என் தேவரின் தரிசனம் இல்லாமல்
என் கண்கள் வியர்வை சிந்துகிறது
என் இதயம் ஊமையாய் அழுகிறது.
சொல்லாமல் என்னை விட்டு
எங்கே தான் சென்றாய் என் அன்பே.
ஒருமுறையேனும் உன் பூ வதனம்
நான் காண வேண்டும்
எப்போது வருவாய் ஆருயிரே.



கவிஞர் நிலமதி ராஜி,கல்முனை(இலங்கை)

# திருநாவுக்கரசு

(பாகம் மூன்று)

சம்பந்தர் திருப்பூந்துருத்தி வருகை கேட்டு விரைந்தார் நாவுக்கரசர்
சம்பந்தர் மணிமுத்துச் சிவிகையில் அமர்ந்தபடி அப்பரைத் தேடினார்
சம்பந்தர் சிவிகையில் பயணிப்பதைப் பரவசமாகக் கண்டார் அப்பர்
சம்பந்தர் இங்கு அங்கு, எல்லாப் பக்கங்களிலும் தேடினார் அப்பரை

முத்து சிவிகையை சுமக்கும் அடியார்களில் ஒருவரானார் அப்பர்
பற்றற்ற பிள்ளை பற்றுதலோடு வினவினார் "அப்பர் சுவாமிகள் எங்கே?"
சற்றும் எதிர்பாராமல், "அடியேன் தங்களைச் சுமக்கிறேன்", என்றார்
பத்தும் பறந்தோட அலறினார் பிள்ளை,"நிறுத்துங்கள் சிவிகையை"

நாடி வந்த சம்பந்தர்,"என்ன காரியம் செய்தீர் சிறுவனை சுமக்கலாமா?"
"தோடுடைய செவியன் மடியில் அமர்ந்த சாமிப் பிள்ளை அல்லவா?"
"வாடிய தோளில் சுமப்பது என் பாக்கியமல்லவா?" நெக்குருகினார் அப்பர்
வேதநாயகன் சம்பந்தர் அப்பர் காலில் விழ, இருவரும் தோள் தழுவினர்



திருப்பூந்துருத்தியில் சந்தித்து சிவனை வழிபட்டு பதிகங்கள் பாடினர்
திருவீழிமழலையில் பெருமானை வணங்கி வழிபட்டு பதிகங்கள் பாடினர்
திருவாஞ்சியத்தில் சடையனை தரிசித்து வழிபாட்டு பதிகங்கள் பாடினர்
திருமறைக்காடு திருக்கோயில் புகுந்து இருவரும் சன்னிதி வந்தனர்

நேர்வழி திருவாயில் கதவு அடைக்கப்பட்டு ஆண்டுகள் பல ஆயின
புறவழி திருவாயில் வழியே சுற்றி வந்து நுழைந்து தான் இறைவழிபாடு
அறவழிப் பாதை கதவு மூடியபடி இருக்க சிரமதத்திற்கு உள்ளாகினர்
திறக்க முடியாத கதவை திறந்து விட்டால் பகதர்கள் சுகம் பெறுவார்

அங்கு மூடிய கதவு தாழ் திறக்க இருவரிடமும் பக்தர்கள் வேண்டினர்
இங்கு இறைவனடி துதி பாடி இக்கதவை திறந்து வைப்பது நம் கடன்
"மங்காத தமிழில் பாடி திருக்காப்பு விலகச் செய்வீர் அப்பர் பெருமானே
உங்கள் வயதும் அனுபவமும் அரிதானது பாடுங்கள்" வேண்டினார் சம்பந்தர்

பிள்ளையார் சொல் கேட்டு மனம் உவந்து திருப்பதிகங்கள் பாடினார்
எல்லையில்லா ஆனந்தமாக அப்பர் இனிய தமிழில் பாடினார் பாடினார்
இல்லை எனாது தந்தருள "பண்ணினேரு மொழியாள்" என்று பதிகம் பாட
தொல்லை எனும் பிறவியில் "என்மீது இரக்கம் ஒன்று இல்லீர்" வருந்தினார்

இறைவன் திருவுள்ளம் இறங்க, திருக்காப்பு மணிக்கதவம் தாழ் திறந்தது
திரையாக மூடிய கதவு திறக்க வானவர் பூ மாறி பொழிந்தார்கள்
பிறை சூடியவனைக் கண்டு இருவரும் பூமியில் விழுந்து வணங்கினர்
நிறை மனதோடு பக்தர்கள் சூழ ஆலயத்தினுள் நுழைந்து வழிபட்டனர்

பூங்கதவம் எப்போதும் திறந்து மூடும் முறை வழக்காக வேண்டும்
நீங்காத அருள் பெற்ற பிள்ளை பதிகம் பாடி கதவை அடைக்க வேண்டும்
பாங்காக அரசர் கூற சம்பந்தரும் சம்மதித்து பாடிய முதல் பாட்டு
ஓங்கிய முதல் பதிகத்திலே திறந்த திருக்காப்பு மூடிக் கொண்டது

வறியேன் பாடப் பாட பல பாடல்கள் பாடி திறந்த இக் கதவம
அறிவரன் பாடிய ஒரு பாட்டில் மூடியதே உங்கள் திருவடிகள் சரணம்
சிறியவன் பாடல் போதும், பெரியவர் பாடலின் இனிமையில் மெய் மறந்தார்
அடியவர் இருவரும் ஆரத்தழுவி,அடுத்த திருத்தலங்கள் காணச் சென்றனர்


தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# என்னை ஏன் படைத்தாயோ இறைவா?

உயிரையறுத்த உயிரெழுத்தை
எந்தகவிதையில் நான்படிக்க
ஊமைஉடலை தூக்கிசுமந்து
எத்தனைநாள் நான்நடிக்க

என்னைதின்னும் கண்களின்
வாயைகிழித்து எறியவா
தமிழ்தெரிந்தும் மௌனம்பேசும்
நாக்கின்உதட்டை உறிக்கவா



கண்ணைதின்னும் காட்சிகள்
என்னைதின்னால் போதுமா
கருங்கல்லை கடவுளாக
காண்பதுகண்களின் மோகமா

என்னிலையை எப்படித்தான்
எல்லோருக்கும் நான் சொல்ல
என்னைப்படைத்த இறைவனை
எதைக்கொண்டு நான்கொல்ல

ஏனவன் படைத்தானென்று
நிற்கவெச்சு கேட்கணும்
என்னைபடைத்த அவனை
வாழவெச்சு பார்க்கணும்

கவிஞர் செந்தமிழ்சுபபாரதி,மதுரை

# நேர்காணல்

நான் தேடிவந்த
வேலைவாய்ப்பின்
மொத்த வித்தையும்
எனக்கு அத்துப்படிதான்

நேர்காணல் என்றதும்
நெஞ்சம் பதறுது

நான் அறியா
மொழியில்தான்
வினா எழுப்பப்படும்
என்று அறிந்தவுடன்



கவிஞர் விக்னேஷ் கலியமூர்த்தி,தஞ்சை

# ஊமையின் வாக்குமூலம்

ஊழ்வினையின் உந்துதலில் உடலில் ஊனமா
சூழ்வினையின் சூழ்ச்சியில் சந்தித்த சாபமா
வாழ்வினை நிதம் நரகமாக்காமல் செல்லுமா
ஊனத்தில் கீழ்மையானது உள்ளத்தின் ஊனம்
மனஊனமில்லா மனிதயினம் தேவை இக்கணம்
நாவிருந்தும் தீமைகளை எதிர்த்து
நவிலாமல் ஊமையாய் பேசாமலிருப்பவருண்டு
காதிருந்தும் நல்லவற்றுக்குச் செவிசாயாமல்
காலமும் செவிடாய் இருப்பவருண்டு

கைகாலிருந்தும் இல்லாதவர்க்கு இயன்றதை
கொடாமல் முடமாய் கிடப்பாருண்டு

கண்ணிருந்தும் நடக்கும் அநீதியைக்
கண்டும் குருடராய் திகழ்பவருண்டு

மாற்றுத்திறனாளிகளுக்கும் செம்மையாக
வாழ வையகத்தில் வழியுண்டு

ஊனமாயிருந்தும் உள்ளத்தில் உயர்வாய்
உவகையுடன் சீர்மையாய் வாழ்பவருண்டு

ஊனம் உடலில்தான் தவிர உள்ளத்தில்யில்லை
மானுடம் காட்டும் இரக்கம் தேவையில்லை
வானத்தில் வெறுமை என்றும் நிரந்தரமில்லை
எம்இனம் வெற்றிபெற ஊனம் தடையுமில்லை



கவிஞர் பா.இராஜசேகர்,சிதம்பரம்

# முத்தமிழ்




மீனாட்சி ஆட்சி செய்த மாநகராம்
மதுரையம்பதியே, நெடுங்காலம் தொட்டே
சங்கம் வளர்த்த தமிழ்ச்சங்கமே!
இயலும், இசையும், நாடகமும் ஒருங்கே
கொண்ட முத்தமிழ்ச் சங்கமே!
உலகின் தொன்று தொட்டு மொழியாம்
தமிழ் மொழியின் மூலம் சிறந்து
விளங்கி கொண்டிருக்கும் முத்தமிழ் மன்றமே!
உன் சீர் இளமை திற வியந்து கொண்டிருக்கிறதே!
பாற்கடலை கடைந்து அமுதத்தை தேவர்கள்
எடுத்தது போல, நம் மூதறிஞர்கள் தங்களின்
முழு முயற்சியும், தன்னம்பிக்கையும்
கொண்டு முத்தமிழை காத்து வந்திருக்கிறார்களே
ஆதி மொழி தோன்றிய நம் தமிழ் மொழியின்
காலம் ஏதேனும் வரையறுக்கபட்டிருக்கிறதா?
வண்ணத்தமிழ், செந்தமிழ், பிள்ளைத்தமிழ், கன்னித்தமிழ்
தமிழ்மொழிக்குத்தான் எத்தனை மகுடங்கள்,
ஐயாயிரம் வருட பழமையான தொல்காப்பியம் முதல்
கம்பன், வள்ளுவன், பாரதி இன்னும்
கணக்கில் அடங்கா காவிய பெருமக்கள்
கோயில் சிற்பங்கள் நம் கலைகளின் அற்புத வடிவமே!
இன்றைக்கு உலகமே திரும்பி பார்த்த
காசி தமிழ்ச் சங்கத்தின் இன்னிசை
பெருவிழாவில் கலைகளின் சொரூபமே!
திக்கெட்டும் வெற்றி முரசு கொட்டும்
தமிழே நீ வாழியவே!


கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# நிஜங்களின் விளிம்பில் நீ

அருகில் இருந்தால்
அவன் வாசனை
தொலைவில் இருந்தால்
அதுவே வேதனை.

தூரங்கள் நீட்டிக்கொள்ள
துயரங்கள் இடம்மாறியது
துன்பங்கள் போக்கிக்கொள்ள
தூக்கமே பிழையானது.

நிழலோடு நடைபோட
நித்திரையே வழியானது
நிஜமோடு விழி மோத
நினைவுகளே வரமானது.



கைகள் பிண்ணிக்கொள்ள
காரணங்களே தேவையானது !
கண்கள் பேசிக்கொள்ள
காதலே மொழியானது!

அவனில்லா இரவும்
அழகாய் மரணித்தது
அவன் கொண்ட நினைவும்
அடியே உயிர்ப்பித்தது !
அவன் கொண்ட உறவும்
அன்பாய், எனை ஈர்த்தது !

தவழும் மௌனங்களும் தடுமாறியது
ததும்பும் கண்ணீரும் தடம் மோதியது
தேயும் கணங்களும் நிலையானது !

கவிஞர் சந்தியா பாவலன்,வேலூர்

# விவேகானந்தர்

அரிமாவின் நோக்குடன்
ஆற்றல் கொண்ட அதிசயமாய்

கட்டுக்கடங்காத காற்றினைப் போல
கட்டுப்பட்டு இயங்கியதில்லை.

நேரத்தை வீணாக்காதே என்று கூறி
நேரத்தையும் தோற்கடித்த வல்லமை மிக்கவர்

அன்புள்ள சகோதர சகோதரிகளே எனும்
அன்பின் அழைப்பு கட்டிப் போட்டது
அந்நியத் தேசத்தினரையும்.

உனக்கான ஆற்றல் உன்னுள்ளே உள்ளது என
ஊக்கம் ஊட்டியவர்



இறையின் உதவியும் முயன்றால் மட்டுமே
பெறமுடியும் என்று இயல்பை உரைத்தவர்

நூறு இளைஞர்களைக் கொண்டு
புதிய பாரதத்தைச் செதுக்கும்
சிந்தனைச் சிற்பி அவர்.

உண்மைக்காக எதனையும் துறக்கும்
இளைஞர்களின் எழுச்சி நாயகன்

நம்பிக்கை நட்சத்திரம் நரேன்.

கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை

# வாழ நினைத்தால் வாழலாம்

வாழவே முடியாதென
மாண்டிட துடிப்பவனா நீ
இலட்சம் விந்தவணுவில்
ஒருவனாய் ஜெயித்தவன் நீ
என்ன குறை உனக்கு
ஏனிந்த பிணக்கு
உன்னால் முடியாதது என்ன இங்கு இருக்கு



சுற்றும் பூமியும் உனக்குத்தான்
சுட்டெறிக்கும் சூரியனும் உனக்குதான்
விரிந்த எட்டு திக்கும் உனக்குத்தான்
சுவாசிக்கும் காற்றும் உனக்கே உனக்குத்தான்

பறவைகள் ஒன்றும் பசியில் இறந்து பார்த்தில்லை
மனகஷ்டத்தில் உயிரை மாய்த்த மிருகங்கள் உண்டோ?
வாயில்லா ஜீவனே உழைத்து பிழைக்குது
அவைகளை விட நீ எதில் குறைந்தவன்?

எதையும் எதிர்க்கொள்ளும் தைரியம் வளர்த்திடு
உடல்திடம் கொண்டோனைவிட மனதிடம் கொண்டவனே மாவீரன்
தவறு செய்ய மட்டுமே அஞ்சிடு வேறொன்றிலும் விட்டுத்தராதே
மனதை அடக்க கற்றிடு யாருக்கும் அடிமையாகாதிருப்பாய்

இவ்வுலகில் உதித்திட்ட பலனை உலகடைய செய்திடு
மாலையில் மறையும் மலரும் மகிழ்ச்சியுடன் மலருது
பிறந்ததின் பலனை கொடுத்துப் போகுது
யார் பசிபோக்கவோ மரங்களெல்லாம் கனியைத் தருது

நடக்கமுடிகிறதே என்று சந்தோஷப்படு
பறக்க முடியவில்லையே என பதைபதைக்காதே
உடல்திடம் மட்டுமல்ல மனதிடம் கொண்டவனே மாவீரன்
மனதை மட்டும் அடக்கிடு மற்றவருக்கு அடிமையாகாதிருப்பாய்

உனக்கென்ன குறைச்சல் ஊருக்கே வெளிச்சம் நீ
இருளே உன்னை கண்டு விலகிடும் பார்
பாரே போற்றிட எழுந்து வந்திடு
விழுந்து தானே விட்டாய் புதைந்திடவில்லையே

வீறு கொண்டு வா வெற்றி உனதே
விதைக்குள் உறங்கும் விருட்சம் நீதான்

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# துளிப்பாக்கள்

பின்ஜாம இரவு
இழுத்துப் போர்த்திப் படுக்கையில்
விழிக்குமுன் நினைவு

திருவிழா கிராமம்
மூலைக்கு மூலை தேடுகிறேன்
தொலைத்த பால்யம்




திருவிழா மிட்டாய் கடை
பார்த்த உடன் நினைவிலூரும்
உன் முதல் முத்தம்

கிடா வெட்டு
இப்பொழுதும் அம்மாவைத் தேடுகிறேன்
அதே பயம்

உன் கண்வீச்சு
கொஞ்சம் கூட பயமளிக்கவில்லை
அரிவாளோடு அய்யனார்

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# புத்தாண்டே!

காலங்கள் கடந்து போகும்
மீண்டும் மீண்டும் வந்து போகும்
சுழற்சியிலே மாதங்களும்
வாரங்களும் கிழமைகளும்
வந்து போகும் வந்து போகும்.
நேற்றோ கடல் நீர் !
இன்றோ மழை நீர்!
நாளை குடிநீர்! மீண்டும் மீண்டும்
புத்தாண்டுகள் பிறப்பதில்
புதிதொன்றும் நமக்கில்லை
ஆனால் இயற்கையெனும் இனியவனோ
ஓர் புரியாத புதிராவான்
அவன் சிரித்தால் ஜொலிப்பான்
சினங்கொண்டால் கூத்தடிப்பான்
அழகோ ! எதிர்காலம் இயற்கையின் சிரிப்பிலா? சினத்திலா?
சிரிப்பிலும்! சினத்திலும்! பயணிப்போம் நம்பிக்கையுடன்
புதிதாய் பிறந்த புத்தாண்டே!
எம் நம்பிக்கைக்கு உயிர் கொடுப்பாயா?




கவிஞர் ரா.சீனிவாசன்

# இதயத்தில் மலர்ந்த காதல்

வேள்விழிகள் அம்பின்றி
மோகனமாய்த் தாக்க
உள்ளத்தில் பட்டாம்பூச்சிகள்
ஆயிரம் ஆனந்தமாய்ப் பறக்க

உணர்வுகளில் ஏதோ
உள்ளூறும் கிளர்ச்சி
கனவுகளைக் கொடுத்து
காதலை ஊட்டும்



மனதும் மகிழும்
மலராய் மலரும்
தினமும் ஊற்றாய்
தித்திப்புகள் தேனாகும்

வானம் வசமாய்
வனப்பும் நிசமாய்
உனக்கும் எனக்கும்
உறவில் பலமாய்

நெருக்கம் தோன்றும்
நொடிகள் தோறும்
உருக்கமாய் அனைத்தும்
உருகும் மெழுகாய்

பக்கத்தில் இருந்து
பார்த்திடத் தூண்டும்
எக்கனமும் உயிராய்
நேசித்து யாசிக்கும்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# காதல் மூலக்கூறு

நீர்மேல் விழுந்த
துளி போல
என் கண்ணில்
நீ தெரிந்தாய்
துளியின் மேல்பட்ட
மண்துகள் போல
அவளின் பார்வைக்கு
நான் தெரிந்தேன்
நீரோ துகளோ
இயற்கை மூலக்கூறு.
நானோ நீயோ
இயல்பான மூலக்கூறு.



கவிஞர் ச.சத்தியபானு

# சூரியோதயம்

காலை பொழுதில் கதிரவனின் வருகை
மேகங்களின் அணிவகுப்பும்
காற்றின் மனமும்
சில்லென்று குளிர் காற்றும்

நம்மை தேகத்தை தீண்டும்பொழுது
மனம் புத்துணர்ச்சிஅடைகிறதே

அதிகாலையில் பறவைகளின் ஒலியும்
உணவைதேடி இங்கும் அங்குமாக சுறுசுறுப்பாக
பறந்து செல்லுவதை பார்க்கும் போதெல்லாம்
மனம் அடையும் மகிழ்ச்சியை வர்ணிக்க வரிகள் ஏது

மனம் மகிழ்ச்சியாகவும்
புத்துணர்வையும் அடைகிறதே



கவிஞர் பிரேமா முத்துகுமார்,சென்னை

# மீன்கள்

கரைதனில் நின்று
இரைதேடும் மானிடா!
மீனை பிடிப்பதும்
அதைநீ புசிப்பதும் 'வாழ்வியல் சுழற்சி'.
தூண்டிலில் தொங்குவது
இரையல்ல இதுவே 'மானுட சூழ்ச்சி'.
அதையறியாமல் அகப்படும்
அப்பாவி மீன்கள்.



கவிஞர் ஈழன்,புவனகிரி

# நான் கண்ட முதல் உலகம்

முதற்கல்வி தேடலில் முதன்மை கூடமாய்
எனதன்பினிய அகரம் செஞ்சொற் விதித்த
முதற்ஆசான்கள் கிடைத்த இடம் இது

மனதிற்கு அன்றைய நினைவுகள் கேளிக்கையாய்
இன்று என்னுள் முதலடி வளங்கள்
படிப்பின் பாடங்கள் உணர்த்தி நிற்க.
தனி நிம்மதி தான் நிறைவாய்.

மனவர்ண கற்பனையை செதுக்கியிடம் இது.
சிற்றார் எமக்கு புது உலகம்
கிடைத்திட்ட முதல் ஞாபகம் இங்கே.

கலகலப்பிற்கு குறைவேயில்லை சினேகிதங்கள் கூடி.
தாய் தந்தை அடுத்து பண்பினியது
இவ்விடம் தவிர வேறு ஏது
அன்றைய நாட்களில் வீட்டை விட்டால்
விளையாடி திரிந்த இடங்கள் என்றால்
முதற்கண் வருவது இவ்விடம் தான்.
ஒவ்வொரு நெஞ்சார்ந்த தருணங்களும் நான்
இவ்விடம் அடி நிற்க முன்
படி அடிதுணை பலம் கொடுத்த
பேர் கலை நான் உட்பட
என் பெற்றோர்கள் முதல் அறிவார்.



கவிஞர் வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்

# ஆறாம் விரல்

பதட்டத்தில் அழுத்தியும் பக்கத்தில் செலுத்தியும்
முனங்களின் முறுக்குகளோடு குத்தீட்டிக் கோடுகள்
குபேரச் சிலுவைகள் குழந்தையின் கைகளில்
துருப்பேறிய விரல்களுக்கு கருப்பொருள் கடவுள்

சுட்டும் விரலில் சுழலும் பிரபஞ்சம்
கட்டுடைக்கும் கட்டுக்காவலும் படைக்கும் சூட்சமக்காரன்
விம்மி அழுகும் போது சமூகம் உரத்த சிரிப்பு
மூடிக் கொள்ளும் நிசப்தங்கள் அகிலத்தை அசைபோடும்

திசைகளுக்குச் சக்காளத்தி புதுமை வழி சொல்லும்
ஆருயிர் பச்சை மைகள் ஆனந்தக் கூத்தாடி
கே "சாதி" பாதம் கிளுகிளுப்பை முடிச்சவுக்கும்
பால் குடித்து பசியாறி கால் ஊன்றி களமாடும்

நீல மை எங்கும் நிலைமை காட்டும்
கால மை அழியாமல் பனுவல் கைரேகை
வெண் புகையியில் வேகவைத்த நுரையீரல்
உயிர்வளியில் கலக்கும் உயிர் தொட்ரி



கவிஞர் மகரந்தன் மா.வசந்த்குமார்,பொள்ளாச்சி

# நாரண. துரைக்கண்ணன்

## (கட்டுரை)

### முன்னுரை



நாரண. துரைக்கண்ணன் (ஆகஸ்ட் 24, 1906 - ஜூலை 22, 1996) தமிழ்நாட்டின் சிறந்த பத்திரிகையாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். ஜீவா என்ற புனை பெயரில் எழுதியவர். சிறுகதைகள், புதினங்கள், தலைவர்கள் வரலாறு, நாடகம், கவிதை, அரசியல் தலையங்கம் என்று பல்வேறு இலக்கியத் துறைகளில் எழுதியவர்.

### பிறப்பு

1906 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் க. வே. நாராயணசாமி - அலர்மேல் மங்கை ஆகியோருக்குப் பிறந்தார். பெற்றோர் சூட்டிய பெயர் நடராசன். ஆனால், அவர்கள் "துரைக்கண்ணு' என்று செல்லமாக அழைத்தனர். எழுத்துலகில் நாரண துரைக்கண்ணன் என்ற பெயர் நிலைபெற்றது. 1932 ஆம் ஆண்டு, தன் 25வது வயதில் மீனாம்பாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். 1982 ஆம் ஆண்டில் மனைவி காலமானார்.

### படிப்பு :

இவரது இளமைக்கல்வி திண்ணைப் பள்ளியிலும், திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியிலும் அமைந்தது. மறைமலை அடிகள் போன்றவர்களிடம் தமிழ் பயின்றார். மெய்ப்பு சரிபார்க்கும் பணியில் பல அச்சகங்களில் பணியாற்றினார். மெய்ப்பு சரி பார்ப்பதில் வல்லவரானார்.

# நாரண.துரைக்கண்ணன்

(கட்டுரை)

## எழுத்துப்பணி :

வருவாயைப் பெருக்க சில காலம் அடிசன் கம்பெனியில் பணியாற்றினார். நாரண துரைக்கண்ணனின் முதல் கட்டுரையே "சரஸ்வதி பூஜை' என்கிற பெயரில் 1924-ஆம் ஆண்டு சுதேசமித்திரன் இதழில் வெளியானது.

## பத்திரிகையாளராக அறிமுகம்

பரலி சு. நெல்லையப்பர் மூலம் லோகோபகாரி வார இதழில் உதவி ஆசிரியராக அறிமுகமானர். தேசபந்து, திராவிடன், தமிழ்நாடு போன்ற பத்திரிகைகளில் பணியாற்றினார். 1932 "ஆனந்த போதினி" என்ற இதழின் ஆசிரியரானார். அந்த இதழில்தான் "அழகாம்பிகை' என்ற சிறுகதையை எழுதினார். அதுவே அவருடைய முதல் சிறுகதை என்று கூறலாம். 1934 ஆம் ஆண்டு "பிரசண்ட விகடன்" ஆசிரியர் பொறுப்பினை ஏற்றார். 32 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து அதன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

## நாவலாசிரியராக அறிமுகம்

இதழாசிரியராக இருந்ததால் பல்வேறு பகுதிகளை எழுதும்போது வெவ்வேறு புனைப் பெயர்களை அமைத்துக்கொள்ள நேர்ந்தது. தான் ஆசிரியராக இருந்த ஆனந்த போதினி, பிரசண்ட விகடன் மாத, மாதமிருமுறை இதழ்களில், மைவண்ணன், வேள், துலாம், தராசு, திருமயிலைக் கவிராயர், துரை, லியோ எனப் பல்வேறு புனைப் பெயர்களில் கதை, தொடர்கதை, அரசியல் தலையங்கம், விமர்சனங்கள், விவாதங்கள், நாடகங்கள் எழுதினார். அவ்வாறு எழுதும்போது பல்வேறு பெயர்களைச் சூட்டிக் கொண்டாலும் "ஜீவா" என்ற பெயர்தான் வாசகர்கள், எழுத்தாளர்களிடையே அன்று பிரபலமானது.

# நாரண.துரைக்கண்ணன்

## (கட்டுரை)

### பொறுப்புகள்

தலைவர்- தமிழ் எழுத்தாளர் சங்கம்
செயலாளர்- கம்பர் கழகம், சென்னை
தலைவர்- முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
துணைத்தலைவர்- தென்னிந்திய பத்திரிகையாளர் பெருமன்றம்
தலைவர்- தமிழ்க் கவிஞர் மன்றம்

### படைப்புகள்

பதினைந்துக்கும் மேற்பட்ட புதினங்கள், கதைகள், நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள், ஆராய்ச்சிகள், மொழிபெயர்ப்புகள் உட்பட 130ற்கும் மேல் நூல்களை இவர் எழுதியுள்ளார். இவரது நூல்கள் அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

01. புதுமைப்பெண்; அருணோதயம், சென்னை.
02. வள்ளலார் (நாடகம்)
03. அருட்கவி அமுதம் (பக்திப்பாடல் தொகுப்பு)
04. திருவருட்பா பற்றிய நூல்
05. உயிரோவியம் (புதினம்)
06. உயிரோவியம் (நாடகம்)
07. நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்? (புதினம்)
08. தாசி ரமணி (தேவதாசிகள் என்ற இழுக்கை சமூகத்தில் இருந்து களைய வேண்டும் என்ற கிளர்ச்சி நாட்டில் பரவிய காலத்தில் எழுதப்பட்ட புதினம்)
09. தீண்டாதார் யார்? (நாடகம்)
10. காதலனா? காதகனா? (மாணவர் சீர்கேட்டைச் சுட்டிக்காட்டும் புதினம்)
11. இலட்சிய புருடன்
12. வேலைக்காரி
13. நடுத்தெரு நாராயணன்

# நாரண.துரைக்கண்ணன்

(கட்டுரை)

**இறப்பு :**



மகாகவி பாரதியின் பாடல்களை நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டவர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்தார். 'நற்கலை நம்பி', 'இலக்கியச் செம்மல்' என்னும் பட்டங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். 'வாழ்க்கைக் கலைஞர்' என்று மு.வ.வால் போற்றப்பட்ட நாரண. துரைக்கண்ணன் 1996-ல், 90-வது வயதில் மறைந்தார்.

கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com